# தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தல் - 2026

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தேர்தல் பிரச்சாரம்!

## இன்று ஆண்டிப்பட்டி, திண்டுக்கல்லில் உரையாற்றுகிறார் !

தமிழகம் முழுவதும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்கு சேகரிக்கிறார்.

இந்த தொடர் பிரச்சாரத்தை தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், மார்ச் 31-ஆம் தேதி திருவாரூரில் தொடங்கிய நிலையில், ஆறாம் கட்ட பரப்புரையை ஏப்ரல் 17-ஆம் தேதி ஆண்டிப்பட்டியில் தொடங்குகிறார்.

தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில், சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணிக் கட்சி வேட்பாளர்களை ஆதரித்து தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆறாம் கட்டமாக ஆண்டிப்பட்டியில் பரப்புரையை தொடங்குகிறார்.

## தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பிரச்சார விவரம்

| நேரம் | இடம் | கலந்து கொள்ளும் சட்டமன்றத் தொகுதிகள் |
|---|---|---|
| **17.04.2026 (வெள்ளிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | ஆண்டிப்பட்டி - (பொதுக்கூட்டம்) | ஆண்டிப்பட்டி, பெரியகுளம், போடிநாயக்கனூர், கம்பம், |
| மாலை 7 மணி | திண்டுக்கல் - மணிக்கூண்டு (பொதுக்கூட்டம்) | திண்டுக்கல், பழனி, ஆத்தூர், நிலக்கோட்டை, வேடசந்தூர், ஒட்டன்சத்திரம், நத்தம் |
| **18.04.2026 (சனிக் கிழமை)** | | |
| மாலை 5 மணி | திருப்பூர் (பொதுக்கூட்டம்) | திருப்பூர் தெற்கு, திருப்பூர் வடக்கு, பல்லடம், அவினாசி, தாராபுரம், காங்கேயம், உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் |
| மாலை 7 மணி | மேட்டுப்பாளையம் (பொதுக்கூட்டம்) | மேட்டுப்பாளையம், உதகமண்டலம், கூடலூர், குன்னூர், கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர் |
| **19.04.2026 (ஞாயிற்றுக் கிழமை)** | | |
| மாலை 4 மணி | ஒசூர் (பொதுக்கூட்டம்) | ஒசூர், கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, பர்கூர், வேப்பனஹள்ளி, தளி |



குறிப்பு : கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

கழக முன்னணியினர் மற்றும் நிர்வாகிகள் அனைவரும் தலைவர் அவர்கள் தங்கும் இடத்திற்கு வருவதை தவிர்த்து, பிரச்சாரக் கூட்டத்திற்கு நேரடியாக வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள் : 14.04.2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில்

# கருப்புச் சட்டையுடன் அமைச்சர் எ.வ.வேலு வாக்குசேகரிப்பு!

## தொகுதி மறுவரையறை எதிர்ப்பு பதாகைகளை கூட்டணி இயக்கத்தினர் ஏந்திச் சென்றனர்!

திருவண்ணாமலை, ஏப்.17-

திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி, மேற்கு ஒன்றியத்தில் கருப்புச் சட்டையுடன் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு வாக்குசேகரித்தார். ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை எதிர்ப்பு பதாகைகளை கூட்டணி இயக்கத்தினர்உடன் ஏந்திச்சென்றனர்.

நேற்று (16.04.2026 - வியாழக்கிழமை) காலை 7.00 மணிக்கு, திருவண்ணாமலை மேற்கு ஒன்றியத்தில், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளரும், பொதுப்பணித்துறை அமைச்சருமான எ.வ.வேலு அவர்கள் ஒன்றிய அரசின் நாடாளுமன்றத் தொகுதி மறுவரையறை மசோதாவைக் கண்டித்து கருப்புச் சட்டை அணிந்து வாக்கு சேகரித்தார்.

திருவண்ணாமலை மேற்கு ஒன்றியத்தில் பவித்திரம், அரடாப்பட்டு, சு.ஆண்டாப்பட்டு, நடுப்பட்டு, கொளக்குடி, அழகானந்தல், கண்ணப்பந்தல், உடையானந்தல், தென்மாத்தூர் ஆகிய ஊராட்சிகளில் கிராமம், கிராமமாகச் சென்று வாக்குசேகரித்தார்.

பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை பொதுமக்கள் மேள, தாளம் முழங்க சால்வைகள் அணிவித்து வரவேற்றனர். பெண்கள் ஆரத்தி எடுத்து வரவேற்றனர்.

வாக்குசேகரிப்பின் போது பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் உரையாற்றும்போது...

திராவிட மாடல் ஆட்சி நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆசியோடு மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் வேட்பாளராக, உங்கள் அன்பு சகோதரன் போட்டியிடுகிறேன்.

டெல்லி ஏகாதிபத்திய மான பாரதிய ஜனதா அரசு, தமிழ்நாட்டிற்குத் தரவேண்டிய திட்டங்களுக்கான நிதியோ, வெள்ள நிவாரண நிதியோ அல்லது கல்வி நிதியோ தர மறுக்கிறார்கள். கோவைக்கு மெட்ரோ கேட்டால் ஆயிரம் காரணங்கள் சொல்லி தள்ளுபடி செய்கிறார்கள். குஜராத்திற்கு கொடுக்கிறார்கள்.

நமது முதல்வர் அண்ணன் ஸ்டாலின் இல்லத்தரசி திட்டத்தில் ரூ.8 ஆயிரம் கூப்பன் கொடுக்கப்படும். உங்களுக்குத் தேவையான குளிர்சாதனப் பெட்டியோ, சலவை இயந்திரமோ உங்களுக்கு தேவையானதை வாங்கிக் கொள்ளலாம் என்று அறிவித்திருக்கிறார். மேலும், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை ரூபாய் ஆயிரத்திலிருந்து ரூபாய் இரண்டாயிரமாக உயர்த்தப்படும் என வாக்களித்துள்ளார்.

இந்த நிலையில் எடப்பாடி இருக்கிறாரே, நான் ஆட்சிக்கு வந்தால் ரூபாய் பத்தாயிரம் கொடுப்பேன் என்று அறிவித்திருக்கிறார். ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதைப்போல கொடிய நோய் கொரோனா வந்த போது நாங்கள் எதிர்க்கட்சி. சட்டமன்றத்தில் நாங்கள், முதல்வரே மக்கள் இரண்டு, மூன்று மாதங்களாக வீட்டை விட்டு வெளியே வராமல் இருக்கிறார்கள். வேலைக்குச் செல்லும் ஆண்களின் இருசக்கர வாகனங்களையும் போலீசார் ஆயிரக் கணக்கில் பறிமுதல் செய்துள்ளனர். அவர்களின் வாழ்வாதாரத்திற்காக ரூபாய் ஐந்தாயிரம் கொடுங்கள் என்று சட்டமன்றத்தில் போராடினோம். அதற்கு எடப்பாடியார் கஜானா காலி, நாங்கள் பணம் தர முடியாது என்று சொன்னார்.

ஆனால் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே குடும்பத்திற்கு ரூபாய் நான்காயிரம் கொடுத்த தாயுள்ளம் கொண்டவர்தான் அண்ணன் மு.க.ஸ்டாலின். தி.மு.க.வின் தாரக மந்திரமே சொன்னதை செய்வோம். செய்வததை சொல்வோம் என்பதுதான். ஆனால் சொல்லாததையும் நாங்கள் செய்திருக்கிறோம். மக்களுக்கு தெரியும், யார் சொன்ன சொல்லை காப்பாற்றுவார்கள் என்று.

இன்றைக்கு சமையல் எரிவாயு விலை கட்டுக்கடங்காமல் உயர்வதற்குக் காரணம் மோடி அரசு. நிர்மலாசீதாராமன் வரி விதித்துக்கொண்டே செல்கிறார். அதனால் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்கிறது. ஒன்றிய அரசு நிதி ஒதுக்கவில்லை என்றாலும், இந்தியாவிலேயே சிறப்பான ஆட்சி நடத்திவரும், திராவிட மாடல் நாயகன் அண்ணன் மு.க.ஸ்டாலின் அவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம்.

இவ்வாறு அவர் பேசினார்.

வாக்குசேகரிப்பின் போது கழக நிர்வாகிகளும், கூட்டணி இயக்க நிர்வாகிகளும் ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறை எதிர்ப்பு பதாகைகளை ஏந்தி உடன் வாக்குசேகரித்தனர்.

வாக்குசேகரிப்பு நிகழ்ச்சியில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்டப் பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்டத் துணை செயலாளர் பிரியா விஜயரங்கன், தொமுச க.சௌந்தரராசன், ஏ.ஏ.ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர் சந்திரன், த.ரமணன், தேர்தல் பணிக்குழு வழக்கறிஞர் ர.வசந்தகுமார் மற்றும் காங்கிரஸ் கே.குணசேகரன், ம.தி.மு.க. பாசறை பாபு, விடுதலைச் சிறுத்தைகள் ச.நியூட்டன் மற்றும் கூட்டணி இயக்கத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தொகுதி மறு வரையறைக்கு எதிர்ப்பு தெரிவித்து திருச்சி எடமலைப்பட்டி புதூர் 57, 62 வது வார்டுகளில் தி.மு.க. முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு கருப்புக்கொடி ஏற்றி, மசோதா நகலை எரித்து கண்டனத்தை பதிவு செய்தார். இந்நிகழ்வில் மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், மாவட்ட துணை செயலாளர் முத்து செல்வம், டோல்கேட் சுப்பிரமணி காஜாமலை விஜய், வட்டச் செயலாளர் அருமைராஜ், அவைத்தலைவர் மூர்த்தி, சோழன் சம்பத் முத்து பழனி தொமுச குணசேகர் மற்றும் தி.மு.க. கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொண்டனர்.



ஒன்றிய அரசின் தொகுதி மறுவரையறையைக் கண்டித்து, கருப்புக் கொடி ஏற்றியும், தொகுதி மறுவரையறை மசோதா நகலை பொதுப்பணித்துறை எ.வ.வேலு அவர்கள் தீயிட்டு கொளுத்தினார். உடன் இரா.ஸ்ரீதரன், எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், கே.குணசேகரன், சீனி.கார்த்திகேயன், வி.எம்.நேரு, ச.நியூட்டன், இரா.அருள், முஸ்தாக், குட்டி க.புகழேந்தி சி.சண்முகம், பா.ஷெரீப் உட்பட பலர் கலந்து கொண்டனர்.